பாசனத்திற்கு அதிக அளவு பயன்படும் வகையில் சீரமைக்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைப்பாற்றின் குறுக்கே அணை

*வினா எண் 55—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதி வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-40)

திரு. ரா. கு. பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய திட்டம் ஏற்கனவே 1 கோடியே 65 லட்சம் என்று திட்டம் இடப்பட்டு அன் எக்கனமிக்கல் என்று புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கேள்வி மூலமாகவும், துணைப் பொறியாளரைப் பார்த்தும் பேசியதில் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தினர்கள். அது இப்போது ஆய்வு செய்யப்பட்டு 8 கோடி ரூபாய் திட்டத்தில் தலைமைப் பொறியாளருக்கு வந்திருக் கிறது. எனவே அரசும் அமைச்சரும் முயற்சி எடுத்து இந்தத் திட்டம் கொண்டுவர வாய்ப்பு உண்டா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திக்குளம் தாலுகாவிலே தென்மேனி கிராமத்தின் அருகே உள்ள வைப்பாற்றில் அணை கட்டுவதற்கு ஒரு திட்டம் முன்பு ஆய்வில்

இருந்தது. அந்தத் திட்டம் அதிகமாகச் செலவாகும் என்ற காரணத்தினல் அது கைவிடப்பட்டு, இப்போது சாத்தூர் தொகுதியிலே இருக்கங்குடி கிராமத்திலே ஒரு நீர்த்தேக்கம் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் 20 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கால்வாய் வெட்டி, கோவில்பட்டி, விளாத்திக்குளம், சாத்தூர் போன்ற பகுதிகளுக்குப் புதிதாக பாசன வசதி அளிப்பதற்காக ஆய்வு நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் தொகுதியில் கடற்கரை ஓரமாக வைப்பார் மேம்பாலம் ஒன்று உள்ளது. அப் பாலத்திற்கு இடைவெளியில் ஸ்குரு டைப் ஷட்டர் போட்டு வைத்தால், ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் பயன்பெறும். அங்குள்ள புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற வாய்ப்பிருக்கும். எனவே அதை நிறைவேற்றும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நெல்லை மாவட்டத்தில் உள்ள இந்த வைப்பாற்றில் அணை கட்டுவது சம்பந்தமாக தொடர்ந்து ஒவ்வொரு தடவையும் இடங்களை மாற்றிக் கொண்டிருக்கிருர்கள். இந்த இடத்தில் கட்டுவதா, அந்த இடத்தில் கட்டுவதா, என்று மாறி மாறி இடங்களைத் தேர்ந்தெடுப்பதிலே தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் கோவில்பட்டி தாலுகா, விளாத்திக்குளம் போன்ற பல இடங்களுக்கு இந்தப் பாசன வசதி ஏற்படும் என்று சொல்லுகிருர்கள். எந்தெந்த கண்மாயில் எந்த அளவுக்கு தண்ணீர் நிரம்புவதற்கு வசதி இருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, இது நீண்ட நாளாக தொடர்ந்து இந்த வட்டார மக்களுடைய கோரிக்கையாக இருப்பதால், கடலில் விழுந்து வீணைகப் போகக்கூடிய தண்ணீரை இருபோகம் விளையக்கூடிய

வகையிலே இந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்த அணை'யைக் கட்ட துரிதமாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களைப் போடுகின்ற நேரத்தில் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களா, வயபிளா அல்லது எக்கனமிக்கலா என்பதைப் பார்த்துத்தான் திட்டங்களைப் போடவேண்டியிருக்கிறது. வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் சரிவர நடவடிக்கை எடுக்க முடியாத நிலையிலே அதிகமாகச் செலவாகும் என்ற காரணத்தினாலேயும் கைவிடப்பட் டிருக்கிறது. அதற்கு மாறாக இன்று இருக்கன்குடிப் பகுதியிலே சாத்தூர், விளாத்திகுளம், கோவில்பட்டி போன்ற பகுதிகளுக்கு பாசன வசதி கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்ற முறையிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எத்தனை நிலங்கள் எவ்வளவு கண்மாய்கள் என்பதெல்லாம் ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, விளாத்திக் குளம், சாத்தூர், கோவில்பட்டி போன்ற இடங்களுக்குப் பயன் படும் வகையில் வைப்பாற்றில் அணை கட்ட இருப்பதாகச் சொன் னார்கள். ஆனால் இந்த அணைக்கட்டு வருவதைத் தடுப்பதற்கு சில நிலச்சுவான்தார்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள். அவர் களுடைய ஆட்சேபணையைத் தாக்கி எறிந்து அணை கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல திட்டத்திற்கு எப்படிப்பட்ட தடைகள் வந்தாலும் அந்தத் தடைகளை மீறி நன்மை செய்யும் அரசுதான் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, அணை கட்டுவது கைவிடப்பட்டது அதிக செலவு என்ற காரணத்தால் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுவதில் அதிக செலவு வந்தாலும், நஷ்டம் வந்தாலும் ஆரமபிக்கப்படுகிறபோது, விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுக்கிறபோது செலவு அதிகம் என்று கைவிடுவது சரியா? அந்தக் கொள்கையை இந்த அரசும் கடைப்பிடிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும் அரசினுடைய கொள்கை எப்படிப்பட்டது என்று. அதிகம் செலவாகிறது என்பதை மாத்திரம் கணக்கில் கொண்டு நாம் திட்டங்களைத் தீட்டுவது இல்லை. அந்தத் திட்டங்களின் மூலம் எத்தனை ஏக்கர்கள் பாசன வாய்ப்புகள் பெற முடியும் என்ற அடிப்படையை மையமாக வைத்துத்தான் திட்டங்களைத் தீட்டுகிருேம். இந்த அரசைப் பொறுத்தவரையில் செலவு அதிகமானாலும் எவ்வளவுதூரம் மக்களுக்கு அந்தத் திட்டம் பயன்படும் என்ற அடிப்படையில் அந்தத் திட்டங்களைப் பரிசீலித்து வருகிறது. அந்த முறையில்தான் இந்த வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுவது சரியல்ல என்ற எண்ணத்தில் கைவிட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோட்டில் பால் உற்பத்தி—சுத்திகரிப்பு ஆலை

* வினு எண் 56—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோட்டில் பால் உற்பத்தி—சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) இவ் வினுவிற்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பால் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பிப்பது பற்றிய செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனல்,